www.Padasalai.Net www.CBSEtips.in

# 12 ஆம் வகுப்பு. உடனடித்தேர்வு – ஜூன் 2023

PART - III

**வணிகவியல் (விடைகளுடன்)**

கால அளவு : 3.00 மணி நேரம் ] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்:
(அ) ஃபோயல் (ஆ) டெய்லர்
(இ) மேயோ (ஈ) ஜேக்கப்

2. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது:
(அ) புதுமைப்படுத்துதல் (ஆ) கட்டுப்படுத்துதல்
(இ) திட்டமிடுதல் (ஈ) முடிவெடுத்தல்

3. NESI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு :
(அ) 1990 (ஆ) 1992 (இ) 1998 (ஈ) 1997

4. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ________ என்று அழைக்கலாம்.
(அ) வணிகத்தாள் சந்தை
(ஆ) கருவூல இரசீது சந்தை
(இ) வணிக இரசீது சந்தை (ஈ) மூலதனச் சந்தை

5. நம்பிக்கையற்ற ஊகவணிகர்கள் என்பவர்:
(அ) காளை (ஆ) கரடி
(இ) கலைமான் (ஈ) முடவாத்து

6. ஒவ்வொரு பங்குச்சந்தையின் ஆட்சிக் குழுவில் ________ உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு நிதி அமைச்சகம் செபியிடம் அதிகாரம் அளிக்கிறது.
(அ) 5 (ஆ) 3 (இ) 6 (ஈ) 7

7. சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை பின்வருவனவற்றுள் எது மேம்படுத்துகிறது?
(அ) பயிற்சி (ஆ) தேர்ந்தெடுப்பு
(இ) ஆட்சேர்ப்பு
(ஈ) செயல்திறன் மதிப்பீடு

8. இணையம் மூலம் பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும் முறை ________.
(அ) பசுமை சந்தையிடுதல்
(ஆ) மின் சந்தையிடுதல்
(இ) சமூக சந்தையிடுதல்
(ஈ) மெட்டா சந்தையிடுதல்

9. "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு ________.
(அ) 1960 (ஆ) 1957 (இ) 1954 (ஈ) 1958

10. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை ________.
(அ) முற்றுரிமை முறை
(ஆ) பணத்திற்கு மாற்றுதல்
(இ) பண்டமாற்று முறை
(ஈ) தற்சார்பு உற்பத்தி

11. பொருட்களின் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை ________ இருந்தால் மாநில ஆணையத்திடம் புகார் தெரிவிக்கலாம்.
(அ) ₹2 இலட்சத்திற்கு மிகையாக, ஆனால் ₹5 இலட்சத்திற்கு மிகாமல்
(ஆ) ₹20 இலட்சத்திற்கு மிகையாக ,ஆனால் ₹1 கோடிக்கு மிகாமல்
(இ) ₹3 இலட்சத்திற்கு மிகையாக, ஆனால் ₹5 இலட்சத்திற்கு மிகாமல்
(ஈ) ₹4 இலட்சத்திற்கு மிகையாக, ஆனால் ₹20 இலட்சத்திற்கு மிகாமல்

12. ஜி.எஸ்.டி. என்பது ________ .
(அ) சரக்கு மற்றும் சமூக வரி
(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
(இ) சரக்கு மற்றும் விற்பனை வரி
(ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

13. ________ புதிய தொழில்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
(அ) உலகமயமாக்கல் (ஆ) தனியார்மயமாக்கல்
(இ) தாராளமயமாக்கல்
(ஈ) இவற்றில் எதுவும் இல்லை

14. விற்பனை ஒப்பந்தத்தில் யாருக்கு விற்பதற்கு உரிமை உண்டு?
(அ) வாங்குனர் (ஆ) விற்பவர்
(இ) வாடகைக்கு எடுப்பவர் (ஈ) அனுப்பப் பெற்றவர்

15. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ________.
(அ) தேர்வு (ஆ) ஆட்சேர்ப்பு
(இ) நேர்காணல் (ஈ) தூண்டுதல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph:8124201000/8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



16. கூட்டுப் பங்கு தொழில் முனைவோரின் வேறு பெயர் :
(அ) அகத்தொழில் முனைவோர்
(ஆ) தோற்றுவிப்பாளர்
(இ) மேலாளர் (ஈ) பங்குநர்

17. ______ திட்ட அறிக்கையில் துணிகரத்தை நிர்வகிப்பதற்கான நெறிமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.
(அ) வங்கியர் (ஆ) அரசு
(இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள்
(ஈ) தொழில் முனைவோர்

18. முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் ______ எனப்படும்.
(அ) ஊக்கப் பங்குகள்
(ஆ) சாதாரணப் பங்குகள் (இ) உரிமைப் பங்குகள்
(ஈ) முன்னுரிமைப் பங்குகள்

19. நிறுமச்சட்டம் 2013ன்படி ஒரு நபர் இயக்குனராக அதிகபட்சமாக ______ நிறுமங்களுக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது.
(அ) 5 (ஆ) 10 (இ) 20 (ஈ) 15

20. ______ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும்.
(அ) சட்டமுறை (ஆ) ஆண்டுப் பொது
(இ) சிறப்பு (ஈ) வகுப்புப் பொது

## பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும்.
**7 × 2 = 14**

21. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
22. திட்டமிடுதல் என்றால் என்ன?
23. தரகர் என்பவர் யார்?
24. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
25. உலகமயமாக்கலின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.
26. நிகழ் சரக்கு என்றால் என்ன?
27. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகளில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக,
28. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
29. மேலாண்மை இயக்குநர் என்று யாரை அழைக்கிறோம்?
30. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும்.
**7 × 3 = 21**

31. மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.
32. கருவூலம் இரசீதின் வகைகள் யாவை?
33. பங்குச் சந்தையின் குறைபாடுகள் எவையேனும் மூன்றினை விவரிக்கவும்.
34. காலத்தின் அடிப்படையில் சந்தையின் வகைகள் யாவை?
35. தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் – இவர்களை வேறுபடுத்திக் காட்டுக.
36. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
37. புதிய பொருளாதாரக் கொள்கை பற்றிக் குறிப்பு வரைக.
38. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
39. நிழல் இயக்குநர் என்பவர் யார்?
40. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகள் எவையேனும் மூன்றினைக் கூறுக.

## பகுதி - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
**7 × 5 = 35**

41. அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துகள் எவையேனும் ஐந்தினை விளக்கவும்.
**(அல்லது)**
ஆ) எல்.பி.ஜி (LPG)யின் சிறப்பு அம்சங்களை விளக்குக.

42. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக.
**(அல்லது)**
ஆ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரிக்கவும்.

43. அ) பங்கு சந்தை, பொருட்கள் பரிமாற்றகம் – வேறுபடுத்துக.
**(அல்லது)**
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அக வளங்கள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

44. அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளைக் குறிப்பிடுக.
**(அல்லது)**
ஆ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

45. அ) புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான படிநிலைகளை விளக்குக.
**(அல்லது)**
ஆ) இயக்குநரின் தகுதிகள் பற்றி கூறுக.

46. அ) மேலாண்மையின் பணிகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.
**(அல்லது)**
ஆ) மனிதவள மேலாண்மையின் செயல் பணிகளை விவரிக்கவும்.

47. அ) பயிற்சியின் நன்மைகளை விளக்கு.
**(அல்லது)**
ஆ) செபியின் அதிகாரங்களை விவரிக்கவும்.

❆❆❆❆

# விடைகள்

## பகுதி - I

1. (ஆ) டெய்லர்
2. (இ) திட்டமிடுதல்
3. (ஆ) 1992
4. (இ) வணிக இரசீது சந்தை
5. (ஆ) கரடி
6. (ஆ) 3
7. (அ) பயிற்சி
8. (ஆ) மின் சந்தையிடுதல்
9. (அ) 1960
10. (இ) பண்டமாற்று முறை
11. (ஆ) ₹20 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ₹1 கோடிக்கு மிகாமல்
12. (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
13. (இ) தாராளமயமாக்கல்
14. (ஆ) விற்பவர்
15. (அ) தேர்வு
16. (ஆ) தோற்றுவிப்பாளர்

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



17. (ஈ) தொழில் முனைவோர்
18. (அ) ஊக்கப் பங்குகள்
19. (இ) 20
20. (அ) சட்டமுறை

## பகுதி - II

21. அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.

22. (i) திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும். திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.
   (ii) திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்

23. (i) தரகர்கள், கழிவு முகவர் ஆவர்.
   (ii) பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்குமிடையே இடை நிலையாளர்களாகத் தரகர்கள் செயல்படுகின்றனர்.
   (iii) இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை.

24. நிறுவனங்கள் தங்களது சொந்த பணியாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் மேம்பாடுகள் வழங்குவதற்கு பதிலாக போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதி சாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துகிறது. இது கவர்தல் என்றும் அழைக்கப்படுகிறது. அல்லது திறமையானவர்களை வேட்டையாடுதல் எனப்படுகிறது.

25. (i) வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல்
   (ii) சந்தை விரிவாக்கம்

26. இது ஒருவகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது. உதாரணமாக `A' என்பவர் `B' என்பவரோடு ஒரு குறிப்பிட்ட ஓவியம் `C' யிடமிருந்து கிடைத்தால் விற்பனை செய்கிறேன் என ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அந்த ஓவியப் பொருள் வருநிகழ்வுசார் சரக்கு என்று பொருட்படும்.

27. (i) **தொழில் துணிகர உணர்வு :** தொழில் முனைபவர் தான் மேற்கொண்ட தொழிலில் ஏற்படும் இடர்களை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும்.
   (ii) **தன்னம்பிக்கை :** தன்னம்பிக்கை ஒரு மனிதனுக்கு அழகு ஏற்படுத்துகிறது. எதிர்மறை உணர்வுகளான அசௌகரியங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் மற்றும் தொல்லைகள் தொழில் முனைபவரது மன உறுதியை குலைக்கக்கூடாது.

28. இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இந்திய பொருளாதாரம் மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது. உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் மின்னணு முறையில் பெற வகை செய்திடும் அறிவு பொருளாதாரமாக இந்திய பொருளாதாரம் மாறி வருகிறது என்றால் மிகையாகாது.

29. இயக்குனராக நிறுமத்தில் பணி புரியும் ஒருவர் அதிகபட்சமான அதிகாரங்களை கொண்டவருமாக, கம்பெனியின் நிர்வாகத்தில் அதிக ஆர்வம் அதிகபட்சமான சுதந்திரமும் உடையவர் கம்பெனியை வழிநடத்துவதற்கும் இயக்குநர்களை கட்டுப்படுத்தும் உரிமையும் இவருக்கு உண்டு.

30. அரசு அல்லது தங்கமுனை பத்திரங்களை வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு 'அரசு பத்திரங்கள் சந்தை' என்று பெயர்.

## பகுதி - III

31. ஹென்றி ஃபோயல் என்பவரின் கூற்றுப்படி, "மேலாண்மை என்பது முன்கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது."

32. **கருவூல இரசீதின் வகைகள் :** காலவரையறை அடிப்படையில் இந்த இரசீதுகள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு.
   (i) 91 நாட்கள் கருவூல இரசீதுகள்
   (ii) 182 நாட்கள் கருவூல இரசீதுகள்
   (iii) 364 நாட்கள் கருவூல இரசீதுகள்
   - 91 நாட்கள் கருவூல ரசீதுகள் ஒரு நிலையான 4 சதவீத தள்ளுபடி விகிதத்தில் ஏலத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன.
   - இந்திய ரிசர்வ் வங்கி 91 நாட்கள் மற்றும் 182 நாட்கள் கருவூல இரசீதுகளை ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.
   - 364 நாட்கள் கருவூல இரசீதுகள் எவ்வித நிலையான விகிதமும் கொண்டு செயல்படுவதில்லை. இந்த தள்ளுபடி விகிதம் அதிகார அமைப்பின் இசைவினை பெற்று பங்கேற்பாளர்களுக்கு ஏலத்தில் தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய விகிதத்தையே தள்ளுபடி விகிதம் என்று குறிப்பிடப்படுகிறது.

33. பங்கு மாற்றகங்களின் குறைபாடுகளை பின்வருமாறு கூறலாம்.
   (i) பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
   (ii) பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
   (iii) ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி.

34. **(i) மிக குறுகிய கால சந்தை :** இவ்வகை சந்தையில் மிக குறுகிய காலத்தில் பயன்படத்தக்க பொருட்கள் மட்டுமே கையாளப்படுகிறது. அதாவது அழுகக்கூடிய தன்மை உடைய பொருட்களான, பால், முட்டை, காய் மற்றும் கனிகள் போன்றவைகள். இத்தகைய சந்தையானது கிராமப்புறங்களில் இன்றளவும் நடைபெறுகிறது.
   **(ii) குறுகிய கால சந்தை :** இத்தகைய சந்தையில் ஒரு சில பொருட்கள் இச்சந்தையில் தேவையை சமாளிப்பதற்கு அளிப்பின் அளவு சரிசெய்யப்படுகிறது. தேவை அளிப்பை விட அதிகமானது.
   **(iii) நீண்டகால சந்தை :** நீடித்து உழைக்க கூடிய பொருட்களை கையாளத்தக்க வகையில் உள்ள சந்தையை இது குறிக்கிறது. இத்தகைய சந்தையில் நீண்ட காலத்திற்கு பயன்படுத்த ஏதுவாக உள்ள நுகர்வு பொருட்கள் மற்றும் சேவைகள் மட்டும் சந்தையிடுகை செய்யப்படுகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in https://t.me/StudyMaterialsNet/UPm0



35.

| வ. எண் | அடிப்படை | தொழில் முனைபவர் | மேலாளர் |
|---|---|---|---|
| (i) | நோக்கு | ஒரு அமைப்பினை தேர்ந்தெடுத்து தன்னுடைய வினையை துவக்குவது. | துவக்கிய வினையில் செவ்வனே பணியாற்றுவது இவரின் நோக்கு. |
| (ii) | தகுநிலை | தொழில் முனைபவர் தான் துவங்கிய அமைப்பின் உரிமையாளர். | மேலாளர் ஊதியம் பெறும் உழைப்பாளி. |
| (iii) | இடர் ஏற்றல் | தொழில் முனைபவர் தான் துவங்கிய வினையினால் ஏற்படும் இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மையை தாங்குபவர். | மேலாளர்கள் வினையின் இடரில் பங்கு பெறுவது இல்லை. மாறாக இடர் ஏற்படும்போது வேறு நிறுமத்திற்கு தாவி விடும் பருவகால நண்பர்கள். |

36. (i) சில சூழ்நிலைகளில் வணிகர்கள் தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளை இருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர்.

(ii) இத்தகைய சூழ்நிலைகளில் நுகர்வோர் தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் அடிப்படையில் அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

(iii) இதன் மூலம் வணிகர்கள் நேர்மையற்ற முறையில் பெருலாபம் ஈட்டுகின்றனர். திரையரங்குகளில் அரங்கம் நிறைவு (House Full) எனும் பெயர்ப்பலகை மாட்டப்பட்ட பின்னும் கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு தாராளமாக அனுமதி சீட்டுக்கள் (Tickets) கிடைக்கின்றன.

37. (i) இந்தியா 1991 ஆம் ஆண்டு, பன்னாட்டு பண நிதியம் (IMF) என பிரபலமாக அறியப்பட்ட சர்வதேச மறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (IBRD)ஐ அணுகுகிறது மேலும் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்த $7 மில்லியனை அமெரிக்க டாலர்களை கடனாக பெற்றது. தனியார் துறை மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இடையில் வர்த்தக கட்டுப்பாட்டை அகற்றுவதன் மூலம் பொருளாதாரத்தை தாராளமயமாக்கல் என்பது இந்த நிறுவனங்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

(ii) உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணயநிதியத்தின் (IMF) நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) அறிவித்தது. இந்த புதிய பொருளாதார சீர்திருத்தங்கள் பொதுவாக எல்பிஜி (LPG) அல்லது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படுகிறது.

38. (i) மன அழுத்த நேர்காணலில் விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையினை கேள்விகள் கேட்கப்படும், உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.

(ii) மன அழுத்த சூழ்நிலையில் விண்ணப்பதாரர் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார், பதிலளிக்கிறார் என்பதை உற்று நோக்கி அப்பணிக்கு அவரின் பொருத்தப்பாடு சோதிக்கப்படுகிறது.

(iii) பெரும்பாலும் விற்பனைப் பிரதிநிதிகள் பாதுகாப்பு மற்றும் சட்ட அமலாக்கம் போன்ற துறைகளில் பணியமர்த்தப்படுபவர்களுக்கு இவ்வகையான நேர்காணல் நடத்தப்படுகிறது.

39. இயக்குநர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர் நிழல் இயக்குநர் எனப்படுவார். பிற்காலத்தில் அவர்கள் விருப்பப்பட்டால் இயக்குனராக நியமிக்கப்படலாம்.

40. **மாற்றுச்சீட்டின் சிறப்பியல்புகள் :**

(i) மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.

(ii) மாற்றுச்சீட்டில் “கொடுக்க” என்ற கட்டளை இருக்க வேண்டும்.

(iii) கட்டளை நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்.

## பகுதி - IV

41.(அ) **மேலாண்மையின் அடிப்படைக் கருத்து:** மேலாண்மையின் அடிப்படை கருத்துக்களை பின்வரும் அவற்றின் தொன்றுதொட்ட இயல்புகள் மூலமாக அறிந்து கொள்ள இயலும்.

(i) **அறிவின் தொகுப்பு :** தற்போது மேலாண்மை உயர்தனிச் சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது. மேலாண்மை இலக்கியம் அனைத்து நாடுகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



(ii) **மேலாண்மைக் கருவிகள் :** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியல், தரவு செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பல்கிப் பெருகி விரிவடைந்துள்ளது.

(iii) **தனிப் பாடப்பிரிவு :** பல்வேறு பல்கலைக்கழங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாக அங்கீகரித்திருக்கின்றன. ஏற்றுமதி மேலாண்மை, ஆள்சார் மேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, சந்தை மேலாண்மை, நிதி மேலாண்மை போன்ற மேலாண்மையின் பல்வேறு பகுதிகளில் கருத்தரங்கம், சிறப்புப் பாடப் பிரிவுகள், பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மேலாண்மை நவீனமயமானதாகவும், பிரபலமடைந்தும் வருகின்றது.

(iv) **சிறப்பீடுபாடு:** வணிகத்தின் ஒவ்வொரு செயல்பாட்டுப் பகுதியையும் சீரிய முறையில் மேலாண்மை செய்து வணிகத்தை சிறப்பாக நிர்வகிக்க உயர் கல்வித் தகுதியும், முறையான பயிற்சியும் பெற்ற உரிய முன்னனுபவமுள்ளவர்களை தேர்ந்தெடுத்து பணியமர்த்த வேண்டும் என்ற மனப்பாங்கு தற்போது வளர்ந்து வருகின்றது.

(v) **நடத்தை விதி:** நுகர்வோர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் அல்லது சமுதாயம் போன்றவற்றிற்கு வணிக மேலாண்மை ஆற்ற வேண்டிய சமூகப் பொறுப்புணர்வுகளை அறிவூட்டப்பட்ட வணிகர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். பொது கழகங்களுக்கு தற்போது சமூக மனசாட்சியும், விழிப்புணர்வும் உள்ளது.

**(அல்லது)**

**(ஆ)** தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் என்பது பின்வரும் சிறப்பு கூறுகளை உள்ளடக்கியது.

(i) புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள் அறிமுகம் செய்வது.

(ii) வெளிநாட்டு முதலீடுகள் (FDI & FII) கவர்ந்து இழுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உதவியது.

(iii) முன்னுரிமை மற்றும் வணிகத்தடை நுட்பம் (MRTD) 1969 சட்டம் (திருத்தியமைக்கப்பட்டது).

(iv) கட்டுப்பாடுகள் அகற்றுதல் (Deregulation)

(v) பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்த உதவிவருது.

(vi) வரிகளை மறுசீரமைப்பு செய்தல்

42. **(அ) (i) தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்குதல் :** பொருட்களைப் பற்றி முழுமையான அறிவுடன் அதன் விலை, தரம் மற்றும் அதன் அனைத்து விவரங்களையும் அந்த பொருளை வாங்குவதற்கு முன் தெரிந்து கொள்ள வேண்டியது நுகர்வோரின் முக்கிய பொறுப்பாகும். நுகர்வோர் ஒரு பொருளைப் பற்றிய அறிவை தனது சொந்த அனுபவத்திலோ அல்லது அந்த பொருளை பயன்படுத்திய மற்றவர்களிடமோ அல்லது இணையதளம் மூலமாகவோ பெற்றிருக்க வேண்டும்.

(ii) **பொருட்களின் எடையையும் மற்றும் அளைவையும் உறுதி செய்தல் :** வியாபாரிகள் பெரும்பாலும் நியாயமற்ற எடைகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள் மூலம் நுகர்வோரை ஏமாற்றுகிறார்கள். நுகர்வோர் என்பவர் சரியான எடை மற்றும் சரியான அளவிலான பொருட்களை பெறுகிறோம் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(iii) **விவர அட்டையை கவனமாக படித்தல்:** பொருளின் மீது ஒட்டப்பட்டுள்ள விவர அட்டையை முழுமையாக படிக்க வேண்டியது நுகர்வோரின் கடமையாகும். பொருளின் விவரங்கள் முழுமையாகவும் சரியாகவும் மற்றும் உண்மையாகவும் இருக்க வேண்டும்.

(iv) **தவறான மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள்:** விற்பனையாளர்கள் பெரும்பாலும் பொருட்கள் மீதான கவர்ச்சிகரமான விளம்பரங்களை செய்கிறார்கள். எனவே, இத்தகைய மோசடி விளம்பரங்களால் தவறாக புரிந்துகொண்டு ஏமாறாமல் இருப்பதே நுகர்வோரின் தலையாய கடமையாகும்.

(v) **தவறான திட்டங்கள் :** பெரும்பாலும் விளம்பரங்கள் கவர்ச்சிகரமாகவும், உணர்ச்சிகரமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அவைகள், ஏமாற்றும் வகையிலும் தவறாகவும் இருந்து நுகர்வோர்களை வழி நடத்தலாம். நுகர்வோர் எப்போழுதும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மீது எச்சரிக்கையாகவும், தவறான விளம்பரங்களை தவிர்க்கவும் வேண்டும்.

**(அல்லது)**

**(ஆ)** அரசு பத்திரங்களின் இயல்புகளை விரிவாக பின்வருமாறு பார்க்கலாம்.

(i) **முகமைகள் AGENCIES :** மத்திய அரசு, மாநில அரசுகள், அரசாங்க அமைப்புக்கு இணையான அமைப்புகள் போன்ற அதாவது உள்ளூர் அரசு அமைப்புகள் உதாரணமாக நகராட்சிகள், மாநகராட்சிகள், துறைமுகங்கள் போன்ற தன்னாட்சி அமைப்புகள், மற்றும் பிற அமைப்புகள் போன்ற முகவர்களின் மூலம் அரசு பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன.

(ii) **இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு பணி RBI SPECIAL ROLE :** இந்திய ரிசர்வ் வங்கி அரசு பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக பண மேலாண்மையில் சிறப்பாக செயல்படுகிறது.

(iii) **பத்திரங்களின் இயல்பு NATURE OF SECURITIES:** அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகவும் மேலும் அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது.

(iv) **பணப் புழக்க விபரம் LIQUIDITY PROFILE:** தங்க முனை பத்திரங்கள் பல வகை நீர்மை தன்மை கொண்டவை. அதன்படி மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்திரங்கள் அதிக நீர்மை தன்மை கொண்டதால் அதன் பணப்புழக்கமும் அதிகமாக இருக்கும்.

(v) **வரிவிலக்கு TAX REBATE :** முதலீட்டாளர்களுக்கு பரந்த அளவில் வரிவிலக்கு அளிப்பது இந்த அரசு பத்திரங்களின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இந்த பத்திரங்கள் இந்த நன்மைக்காகவே மிகவும் பிரபலமானதாக உள்ளது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



43. **(அ)**

| வ. எண் | சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச் சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றகம்) |
|---|---|---|---|
| (i) | பொருள் | பங்குச் சந்தை என்பது தொழில்துறை மற்றும் நிதியப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை. | ஒரு பண்டமாற்று பரிமாற்றம் என்பது பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும் பரிமாற்றமாகும். |
| (ii) | பணிகள் | எளிதான சந்தைப்படுத்துதலை வழங்குதல் | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக் காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மை தன்மை ஏற்படுத்துதல். |
| (iii) | நோக்கம் | பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குகிறது. | ஆபத்து குறைப்பு மூலம் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுகிறது. |
| (iv) | பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், நிறுவனங்களின் வியாபாரிகள் மற்றும் ஊகவணிகர்கள் |
| (v) | ஒப்பந்தங்களின் காலம் | ரொக்கம், உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தகளுக்கு 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள் |

**(அல்லது)**

**(ஆ)** பின்வருபவைகள் ஆட்சேர்ப்பின் அக வளங்களாகும்.

**(i) இடமாற்றம் :** ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம் காலிபணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.

**(ii) மேம்படுத்துதல் :** பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலை நோக்கி செல்ல செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.

**(iii) பதவி இறக்கம்:** பணியில் தொடர்ந்து குறைவான செயல்திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல் திறனின் முக்கியத்துவத்தை உணரும் வகையில் அவரை மேல்நிலை பணியிலிருந்து கீழ்நிலை பணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது.

**(iv) பழைய ஊழியர்களின் பரிந்துரை:** பழைய பணியாளர்களை திருப்திப்படுத்த அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களை வேலைக்கு அமர்த்தலாம்.

**(v) வேலை சுழற்சி:** சுழற்சி முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளில் ஈடுபடுவது எப்படி என்பதை ஒவ்வொரு பணியாளரும் அறிந்திருக்க வேண்டும். இவ்வாறு அறிந்திருந்தால், இதனை ஒரு அக வளமாகக் கொண்டு பணியாளர்கள் அனைத்து விதமான பணிகளை மேற்கொள்ள இயலும்.

44. **(அ) (i) பொருள் (Product) :** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும். பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது என்று கூறுகின்ற அளவிற்கு பொருள் முக்கிய இடம் பெறுகிறது.

**(ii) விலை (Price) :** பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி "விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பு ஆக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் விலை என்கிறார்.

**(iii) இடம் (Place) :** ஒரு பொருள் என்னதான் தரம் வாய்ந்தவையாகவும், விலையில் சாதகத்தன்மை மற்றும் சிறந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இருந்தபோதிலும், உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லை எனில் அனைத்தும் பயன் அற்றதாகும். எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

**(iv) விற்பனை மேம்பாடு/விளம்பரம் (Promotion):** சந்தையில் ஒரு பொருள் என்ன தான் தரமுடையதாக இருந்தாலும் மேலும் விலையில் சாதக நிலை இருந்தாலும் நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பு இயல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில் அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒரு போதும் அடைய இயலாது, எனவே மேம்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் அவசியமான ஒன்றாகும். மேம்பாட்டு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

**(அல்லது)**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in https://t.me/studyguidepUm0



(ஆ)

| வ.எண் | வேறுபடுத்தும் கூறுகள் | நிபந்தனைகள் | நம்புறுதிகள் |
|---|---|---|---|
| (i) | பொருள் | ஒப்பந்தத்தின் கருப்பொருளாகத் திகழ்வது. | நம்புறுதி ஒப்பந்தத்திற்குத் துணையாக இருக்கிறது. |
| (ii) | முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தை மீறுவதாகக் கொள்ளப்படுகிறது. | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது. |
| (iii) | உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியும். |
| (iv) | பரிகாரம்/தீர்வு | நிபந்தனை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்ட ஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

45. **(அ)** (i) **பொருளை தேர்ந்தெடுத்தல் :** திறன், உள்நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்/அவள் ஒரு அடையாளக்குறியீடு, புதிய தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது ஏற்கனவே உற்பத்தி செய்து கொண்டு இருக்கும் பொருட்களின் தன்மையை அதாவது கூடுதல் வசதிகள், இட வசதிகள், எளிதான செயல்திறன், விலையை குறைக்க போன்றவற்றிற்கும் இருக்கும். திட்டத்தின் பொருளாதார நம்பகத்தன்மையை தொழில் முனைவோர் ஏற்படுத்த வேண்டும்.

(ii) **தொழில் அமைப்பு முறையை தேர்வு செய்தல் Selection of form of Owership:** குடும்பம், உரிமை, கூட்டாண்மை, தனியார் வரம்புக்குட்பட்ட நிறுவனம் ஆகியவற்றிற்கான தொழில்முறை அமைப்பு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும். குடும்பத்தின் உரிமைகள் மற்றும் கூட்டாண்மை வடிவங்கள் ஆகியவை நிறுவன நிதி உதவி, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் வணிக அனுபவங்களை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

(iii) **இடத் தேர்வு Selection of Site :** தொழில் முனைவோர் தனது முயற்சியைத் தக்க வைப்பதற்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் அவருக்கு இடத்தை தேர்வு செய்ய நான்கு வாய்ப்புகள் உள்ளன.

(iv) **மூலதன கட்டமைப்பை தீர்மானித்தல் Deciding Capital Structure :** இந்த துணிகர நிதிக்கு நிதியளிப்பதற்கான ஆதாரத்தை தொழில் முனைவோர் தீர்மானிக் வேண்டும். அவர்/அவள் சொந்த சேமிப்பு இருப்பு, நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து கடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து காலக்கடன்களை திரட்ட முடியும்.

(v) **உற்பத்தியில் தொழில்நுட்ப முறையை பெறுதல் Acquisition of Manufacturing Know - how :** தொழிற்துறை ஆய்வு கூடங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழிற்துறை மேம்பாட்டுப் பிரிவுகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசகர்களிடமிருந்து உற்பத்தியை எவ்வாறு செய்ய முடியும் என்பதனை அறியலாம்.

**(அல்லது)**

**(ஆ) இயக்குநர் தகுதிகள் :** நிறுமம் கம்பெனி செயல்முறை விதிகளுக்கு வெளிகளில் கூடிய உள்ளவாறு தேவையான தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும். பொதுவாக ஒரு இயக்குநர், நிதி, சட்டம், மேலாண்மை, விற்பனை, சந்தைப்படுத்தல், நிர்வாகம், ஆராய்ச்சி, பெருநிறும ஆளுமை, தொழில்நுட்ப செயல்பாடுகள் அல்லது நிறுமத்தின் வணிக தொடர்பான பிற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் பொருத்தமான திறன்கள், அனுபவம் மற்றும் அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) ஒரு இயக்குநர் சரியான மனநிலை உடைய நபராக இருக்க வேண்டும்.

(ii) ஒரு இயக்குநர் கம்பெனி செயல் முறை புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள தகுதி பங்குகள் வைத்திருக்க வேண்டும்.

(iii) ஒரு இயக்குநர் தனிநபராக இருத்தல் வேண்டும்.

(iv) நல்ல நிதிநிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

(v) நீதிமன்றத்தால் எந்தவிதமான குற்றத்திற்காகவும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டாமல்/தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

46. **(அ) மேலாண்மையின் பணிகள் :**

(i) **திட்டமிடுதல் :** திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும். திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

(ii) **அமைத்தல் :** பணியாளர்களுக்கு பணிகளை ஒப்படைவு செய்வதும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய அதிகாரங்களை வழங்குவதும் மேலும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பணியாளரே பொறுப்பேற்க செய்வதும் அமைத்தல் பணி எனப்படுகிறது.

www.surabooks.com

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



(iii) **பணியமர்த்தல் :** பணியமர்த்தல் என்பது பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை பணியமர்த்தல் உள்ளடக்கியுள்ளது.

(iv) **இயக்குவித்தல்:** தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்க மளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

(v) **கட்டுப்படுத்துதல்:** ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கும் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் கட்டுப்படுத்துதல் செயல்பாடு பயன்படுகிறது.

**(அல்லது)**

**(ஆ)** (i) **திரட்டுதல் :** வேலை பகுப்பாய்வு, மனித வள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தேர்வு, வேலை வாய்ப்பு, பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் மனித வளத்தை ஈர்க்கும் செயலை குறிக்கிறது.

(ii) **வளர்ச்சி :** செயல்திறன் மதிப்பிடுதல், பயிற்சி, செயலதிகாரி வளர்ச்சி, தொழில் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி, நிறுவன வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது அபிவிருத்தியாகும்.

(iii) **ஊதியம்:** இது வேலை மதிப்பீடு, ஊதியம் மற்றும் சம்பள நிர்வாகம், ஊக்கத் தொகை, மேலூதியம், விளிம்பு நலன்கள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

(iv) **ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளுதல்:** சுகாதார மற்றும் பாதுகாப்பு, நலன், சமூக பாதுகாப்பு, வேலை திருப்தி மற்றும் வேலையினால் ஏற்படும் வாழ்க கைத்தரத்தின் மூலம் இது சாத்தியமாகிறது.

(v) **ஒருங்கிணைத்தல்:** தனிப்பட்ட விருப்பிற்கும், நிறுவன விருப்பிற்கும் இடையே நல்லிணக்கதை ஏற்படுத்தும் நோக்கில் உள்ள செயல்பாடுகளை இச்சொல் குறிக்கிறது

(vi) **பராமரிப்பு:** பணியாளர் திருப்தியுடன் பணியாற்ற, பணியாளர் வேலையை விட்டு செல்வதை குறைத்தல், மனித வளத்தை கணக்கில் கொள்ளல், தணிக்கை மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்வதன் மூலம் பணியாளர்களை பராமரிப்பதை இச்சொல் குறிக்கிறது.

47. **(அ)** (i) **நிறுமத்திற்கு கிடைக்கும் நன்மைகள் :**

- இது ஊழியர்களின் திறமையை அதிகரிக்கிறது மற்றும் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துகிறது.
- இது மூலப்பொருள் சேதத்தினையும் மற்றும் செயலற்ற நேரத்தினையும் குறைக்கிறது.
- இது சமீபத்திய போக்குகளுக்கு ஊழியர்களை மாற்ற உதவுகிறது.
- இது மேற்பார்வைக்கான நேரத்தை குறைக்கிறது.

(ii) **ஊழியர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் :**

- பணியாளர்களின் தனித்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துகிறது.
- குறுகிய காலத்தில் அவர்கள் பணியுயர்வு மற்றும் பண மேம்பாட்டிற்கு உதவுகிறது.
- தொழிலாளர் உற்பத்தி திறனை அதிகரிக்கிறது.
- தொழிலாளரின் மனத்திண்மையை ஒழுங்குணர்வுதனை மேம்படுத்துகிறது.

(iii) **வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள்:**

- வாடிக்கையாளர்கள் சிறந்த தரமான பொருள்கள், சேவையினை பெறமுடிகிறது.
- வாடிக்கையாளர்கள் புதுமையான அல்லது மதிப்பு கூட்டப்பட்ட அல்லது சிறப்பியல்புடைய பொருள்களை பெறுகின்றனர்.

**(அல்லது)**

**(ஆ)** (i) **பங்குச்சந்தைகள் மற்றும் இடைத் தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்:** பத்திர வணிகத்தை மேற்கொள்ளும் பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் செபி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

(ii) **நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்:** மூலதனசந்தை இடைத் தரகர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தங்கள் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(iii) **பணியிடங்களில் செயல் பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது:** செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஒரு அதிகாரம் உண்டு. உதாரணமாக, இது பல்வேறு இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் அல்லது முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட விதிகளை அறிமுகப்படுத்தலாம்

(iv) **பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்:** உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

(v) **பத்திரங்கள் ஒப்பந்த சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள்:** பங்குச் சந்தை திறம்பட ஒழுங்குபடுத்த நிதி அமைச்சகம் பத்திரங்கள் ஒப்பந்தங்கள் (ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரங்களை செபிக்கு 13 செப்டம்பர், 1994 அன்று ஒரு அறிவித்தல் மூலம் வழங்கியுள்ளது.

(vi) **பங்குச்சந்தை வணிகத்தை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம்:** பத்திரச் சந்தை மற்றும் பரஸ்பரநிதியுடன் தொடர்புடைய இடைநிலையர்கள், மோசடியான மற்றும் முறையற்ற வியாபார செயல்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

❋❋❋❋❋

Kindly send me your study materials to padasalai.net@gmail.com